# கிளவியாக்கத்தில் சொல்லாக்க மரபுகள்

*முனைவர் அ. ஆத்தீஸ்வரி*
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
மதுரைக் கல்லூரி (தன்னாட்சி), மதுரை
கிளவியாக்கத்தில் சொல்லாக்க மரபுகள்
https://doi.org/10.5281/zenodo.15307915

## நோக்கம்

*தொல்காப்பியம் தமிழ் மொழியின் முழுமைக்கும் இலக்கண அமைவிற்கும் ஒளி விளக்காய்த் திகழ்கின்றது. எழுத்து, சொல், பொருள் என்ற மூவதிகாரத்துள் "சொல்லாவது எழுத்தோடு ஒரு புடையான் ஒற்றுமையுடைத்தாய் பொருள் குறித்து வருவது" என்பது உரையாசிரியர்களால் உணர்த்தப்படுகிறது.*

*இவ்வகையில் சொல்லின் தன்மையை எடுத்துக்கூறுவதும் சொல்லிற்கான இலக்கணங்களை ஒவ்வொரு படி நிலையாக விரித்துரைப்பதும் சொல்லதிகாரம் என வழங்கப்படலாயிற்று. தொல்காப்பியச் சொல்லதிகாரமானது கிளவியாக்கம் முதலாக எச்சவியல் ஈறாக ஒன்பது இயல்களைத் தம்முள் கொண்டுள்ளது. அவ்வகையில் எழுத்துக்கள் பொருள் தரக்கூடிய முறையில் சொற்களாகும் வகையினை உணர்த்தும் கிளவியாக்கம் என்ற இயலில் காணலாகும் சொல்லாக்க மரபுகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

## சொல்லின் தன்மைகள்

*எழுத்துக்கள் பொருளை உணர்த்தக்கூடிய தன்மை. பெறக்கூடிய நிலைகள், சொற்களின் வகைப்பாடு இவற்றை நோக்கி ஆராய்ந்து பிழையின்றி சொற்களால் அமைக்கப்படுவது தொடராகும். இவ்வகைமை நிலையில் அமைகின்ற தொடர்களின் இலக்கணத்தை எடுத்துரைப்பது கிளவியாக்கம் எனப்படுகிறது.*

*"வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான் இவ்வோத்துக் கிளவியாக்கமாயிற்று. ஆக்கம் அமைத்துக் கோடல், நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை அரிசியாக்கினார் என்பவாகலின், சொற்கள் பொருள்கள் மேல் ஆமாறு உணர்த்தினமையால் கிளவியாக்கமாயிற்று எனினும் அமையும். பொது வகையாற் கிளவி என்றமையால் தனிமொழியும் தொடர்மொழியுங் கொள்ளப்படும்" என்பது சேனாவரையர் வழங்கும் உரையாகும். தனிமொழி, தொடர்மொழி எனச் சொல்லானது பொருள்மேல் ஆகிவரும் நிலையில் இருவகைப்படுகிறது.*

*சேனாவரையர் இதனை விளக்கும் போது தனிமொழி சமய ஆற்றலால் பொருள் புலப்படுத்தி நிற்கும் தன்மையது எனக்கூறி இச்சொல்லால் இப்பொருளை உணர வேண்டுமென்ற இறைவனின் விருப்பம். இதனை*

*வடநூலார் "சங்கேதரூபாசக்தி" என்பர். எனக் குறிப்பிட்டு விளக்குவார். தனிமொழி என்பது இச்சொல்லுக்கு இன்ன பொருள் எனக் காலந்தொட்டு வரும் நெறி முறையாகும் என்பது இதனால் புலனாகிறது. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் உரிச்சொல் எனத் தனிமொழியானது நான்கு வகைகளில் அமைகிறது.*

*பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் நிலம், மரம் வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் கண்டான், சென்றான் பெயரையோ வினையையோ சார்ந்து வருவது இடைச்சொல் "மற்று, ஆங்கு இசை, குறிப்பு, பண்பென்னும் பொருட்டுத் தாமே உரிமை உடையது உரிச் சொல்" உறு, தவ. தொடர் மொழியாவது தனிமொழி தாமே இயைந்து பொருள் விளக்குவது என உரைக்கப்படுகிறது. தொடர் மொழியாவது*

*இருமொழித் தொடர், பன்மொழித் தொடர் என வகைப்படுத்தப்படுகிறது.*

*ஒரு சொல் தன்பொருளை விளக்குவதான மற்றொரு சொல்லை அவாவி நிற்றல் என ஒன்றையொன்று அவாவி நின்று பொருள் விளக்குதல் என்றும்,*

*ஒரு சொல் மற்றொரு சொல்லைத் தழுவக் கூடிய தகுதி உடைய நிலையில் நின்று பொருளை விளக்குவது என்றும்,*

*சொற்களை இடையீடின்றிக் கூறும் நிலையில்அமைத்துப்பொருள்கொள்ளப்படக் கூடிய முறையில் அமைவது என்றும் தொடர் மொழியானது பாகுபடுத்தப்படுகிறது.*

*(எ.கா) சாத்தன் சென்றான் இருமொழித் தொடர்*

*(எ.கா) வாழ்தல் வேண்டிப் பெய் கூறாது மெய்கூறினான்*

**பன்மொழித்தொடர்**

**திணைச் சொற்கள்**

*திணை என்ற சொல்லானது ஒழுக்கம் என்ற பொருளில் கையாளப்படுவதை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மேலும் திணை சொல்லானது நிலப்பாகுபாடு பற்றிய பொருளை உணர்த்துவதாகவும் குறிப்பிடப்படுகிறது. தொல்காப்பியர்,*

***"உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே***
***அஃறிணை என்மனார் அவரல பிறவே***
***ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே"*[1]**

*என்பார்.*

*உயர்திணையாவது மக்களென்று கருதப்படும் பொருளை உணர்த்துவதாகக் கருதி "மக்கட் சுட்டே" என்றசொல்லைப்பயன்படுத்துகிறார்.*

*"மக்களென்று கருதப்படாத பிறபொருள்" என்ற தன்மையிலே அஃறிணை என்ற சொல்லைக் குறிப்பிடுகிறார்.*

*இவ்வகைமையிலே உயர்திணைச்சொல், அஃறிணைச் சொல் என வகைப்படுத்தப்படுகிறது.*

*வினவிய பொருளை அறிவுறுத்திச் சொல்வது செப்பெனப்படும். வினவிய பொருள் என்பது வினாவாகும். அறிய வேண்டியதை செப்பும் வினாவுமாகிய சொற்கள் :*

*வெளிப்படுத்தி அதனை அறிவுறுத்தச் சொல்வது விடையாகும்.*

*செவ்வன் இறை, இறை பயப்பது எனச் செப்பானது இருவகைப் படுத்தப்படுகிறது.*

- *செவ்வன் இறை - நேர்விடையாக அமைவது*
- *இறைபயப்பது - மறைவிடையாக அமைவது*

*மேலும் அறிய லுறுதலை யுணர்த்தாது ஒன்றனை அறிவுறுத்து நிற்றலிற் செப்பின் பாற்படும் என்பதும் இதனால் அறிய முடிகிறது.*

*செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் 2*

*செப்பினையும் (விடை) வினாவினையும் வழுவாமல் தொடரில் அமைத்துப் பொருள் கொள்ள வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்தாக அமைகிறது.*

**வண்ணச் சினைச்சொல்**

*வண்ணப். பண்பினைக் காட்டி நிற்கும் உறுப்புக்களுடன் கூடிய பொருள்களின் நிறத்தினை உணர்த்துகின்ற அடைமொழியானது உறுப்பினைக் குறிப்பிடுகின்ற சினைச். சொல்லோடு சேர்ந்து முதற்பொருளோடு தொடர்ந்து வருவது வண்ணச் சினைச்சொல் ஆகும்.*

***நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்*[3]**

*அதாவது பண்புச் சொல்லும், சினைச் சொல்லும் முதல் சொல்லும், என மூன்றும் கூறப்பட்ட முறை மயங்காமல் வழக்கைப் பொருந்தி நடக்கும் வண்ணச் சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்லையுடைய முதற்சொல் என உரை கூறுவார் சேனாவரையர்.*

*இதில் வடிவு, பிழம்பு பிண்டமென பிற பண்பு இருந்த போதிலும் வண்ணம் என்ற பண்பினது வழக்கினை நோக்கியே வண்ணச் சினைச் சொல் எனக் குறிப்பிடப்படுகிறது.*

*எனவே பண்பையும் சினையையும் முதலையும் என ஒன்றையொன்று சிறப்பித்து வருவது வண்ணச் சினைச்சொல் என வழங்கப்படுகிறது.*

*(எ.கா) செங்கால் நாரை*

*வண்ணச்சொல் செங் (செம்மை)*

*சினைச்சொல் கால்*
*முதற்சொல் நாரை*

**வழக்கினாகிய உயர்சொற்கிளவிகள்**

***உயர்வுபடுத்திக் கூறும் சொற்களை உயர் சொல்லாக***

*உயர்க்கும் சொல்லாகத் தொல்காப்பியர் கட்டமைக்கிறார்.*

***ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்***
***ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்***
***வழக்கி னாகிய உயர்சொற் கிளவி***
***இலக்கண மருங்கின் சொல்லா றல்ல[4]***

*அதாவது,*

*ஒருவனையோ ஒருத்தியையோ சொல்லும் போது பன்மைச் சொல்லால் கூறுவது.*

*ஒன்றனைச் சொல்லும் போது பன்மைச் சொல்லால் கூறுவது.*

*இவ்வித 5 வழக்குகளும் உயர்வுபடுத்திக் கூறும் சொற்களாகும். ஆனால் இலக்கண முறைப்படியாக இவ்வாறு கூறுவது நெறியல்ல என விளக்கப்படுகிறது.*

**பலபொருள் ஒரு சொல்**

*ஒரு சொல்லானது ஒரு பொருளைக் குறித்தே வழங்குவது இயல்பாகும். இலக்கண மரபில் ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைத் தரக் கூடிய அமைப்பில் ஒரே சொல்லும் இடம் பெறுவதுண்டு. இவ்வகைச் சொல் பல பொருள்ஒரு சொல் எனக் குறிப்பிடப்படுகிறது. இதனைத் தொல்காப்பியர்,*

***வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்***
***வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்***
***ஆயிரு வகைய பலபொரு ளொருசொல்[5]***

*என்பார். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருவது பலபொருள் ஒரு சொல் ஆகும். இது வினையால் வேறுபடும் பலபொருள் ஒரு சொல், வினையால் வேறுபடாத பலபொருள் ஒருசொல் என இரண்டு வகைப்படுகிறது.*

*வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல்லானது ஒரு பொருளுக்கே உரிய சிறப்புடைய வினையாலும், இனத்தினாலும், சார்பினாலும் தெளிவு பெறுகிறது.*

**நிறைவுரை**

*தமிழ் இலக்கணத்தின் முப்பகுப்பு நிலையினைத் தொல்காப்பியம் முன்னிறுத்துகிறது. சொல்லின் தன்மையை எடுத்துக் கூறும் சொல்லிற்கான இலக்கணங்களைச் சொல்லதிகாரம் ஆராய்கின்றது. சொல்லதிகார கிளவியாக்கமானது சொற்களின் வகைப்பாடு குறித்தும் அவற்றை ஆராய்ந்து பிழையின்றி சொற்களால் அமைக்கப்படும் தொடரின் இயல்பினைக் குறித்தும் விளக்குகிறது. எழுத்துக்கள் பொருள் தரக்கூடிய முறையில் சொற்களாகும் வகைமையினை உணர்த்துவதைக் கிளவியாக்கம் தெளிவுபடுத்துகிறது.*

**குறிப்புகள்**

1. *தொல்காப்பியம், சேனாவரையர் உரை, நூற்பா எண் 1*
2. *மேலது : நூற்பா எண் 13*
3. *மேலது : நூற்பா எண் 26*
4. *மேலது : நூற்பா எண் 27*
5. *மேலது : நூற்பா எண் 52*